## இயல் – 2
## இயற்கை , சுற்றுச்சூழல்

**1. ஒரு மதிப்பெண் வினாக்கள்**

1. “மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும் “ என்று பாடியவர் யார் ?
   - **இளங்கோவடிகள்**

2. தௌலீஸ்வரம் அணை எந்த ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது?
   - **கோதாவரி ஆறு**

3. ‘மே தினமே வருக’ இந்நூலின் ஆசிரியர் யார் ?
   - **கவிஞர்.தமிழ்ஒளி**

4. கந்தம் என்ற சொல்லின் பொருள் யாது ?
   - **மணம்**

5. நீர்நாடு என்று அழைக்கப்படும் நாடு எது?
   - **சோழநாடு**

6. பெரிய புராணத்தை இயற்றியவர் யார்?
   - **சேக்கிழார்**

7. திருத்தொண்டர் திருவந்தாதி என்னும் நூலை எழுதியவர் யார்?
   - **நம்பியாண்டார் நம்பி.**

8. பண்டைத் தமிழர்களின் பண்பாட்டுக் கருவூலமாகத் திகழும் நூல் எது?
   - **புறநானூறு**

9. மல்லல் மூதூர் வயவேந்தே! – எவ்வகைத் தொடர்?
   - **விளித்தொடர்.**

10.அடுபோர். இலக்கணக் குறிப்பு தருக.
**வினைத்தொகை**

## பகுதி – ஆ

**11 குறுவினா**

11. உறைக்கிணறு என்றால் என்ன?

மணற்பாங்கான இடத்தில் தோண்டிச் சுடுமண் வளையமிட்ட கிணறு உறைக்கிணறு எனப்படும்.

12. கவிஞர் தமிழ் ஒளியின் படைப்புகளுள் இரண்டினை எழுதுக.
   - நிலைபெற்ற சிலை

www.grlvidya.in

- மே தினமே வருக
- குருவிப்பட்டி

**13. களை பறிக்கும் பருவம் எது?**

- நட்டபின் வயலில் வளர்ந்த நாற்றின முதலிலை சுருள் விரிந்தது. அப்பருவத்தைக் கண்ட உழவர் இதுதான் களைபறிக்கும் பருவம் என்றனர்.

**14. உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே-குறிப்பு தருக.**

- நீர் இன்றி அமையாத உடல் உணவால் அமைவது ; உணவையே முதன்மையாகவும் உடையது. எனவே , உணவு தந்தவர் உயிரைத் தந்தவர் ஆவர்.

**15. கூவல் என்று அழைக்கப்படுவது எது?**

- உவர்மண் நிலத்தில் தோண்டப்படும் நீர்நிலை.

**பகுதி-இ**

**III. நெடுவினா**

**16. பட்ட மரத்தின் வருத்தங்கள் யாவை?**

பட்டமரத்தின் வருத்தங்கள் :

- மழைநீர் இன்மையால், மரங்கள் பட்டமரங்களாகக் காய்ந்து போகின்றன.
- இலை, தழைகளை யெல்லாம் பெற்றிருந்த மரம், பட்டமரமாகியதால், வெட்டப்படும் நாள் என்று வருமோ என வருந்தி நிற்கிறது.
- அழகிய மலர்களும் பசுமையான இலைகளுமாக நிழல் தந்த மரம், வெந்து வெம்பிக் குமைந்தது.
- மேல்பட்டையாகிய ஆடைகள் எல்லாம் விழுந்தன.
- பாடும் பறவை இனங்கள், வாழ வழியற்றுத் தவித்துப் போயின.
- கிளைகளில் ஏறிக் குதிரை ஆடும் சிறார்கள், விளையாட முடியாமல் ஏங்கினர்.
- இவை அனைத்தும் வெறும் கனவாகிப் போயினவே என்பன, பட்டமரம் வருந்தியது.

**17. சோழர் காலக் குமிழித்தூம்பு எதற்காகப் பயன்படுத்தப்பட்டது**

- சோழர்காலக் ‘குமிழித்தூம்பின் பயன்கள்* அணையில் வழிந்தோடும் நீரின் அளவை அதிகரிக்கவும், அணையின் முன் தேங்கும் நீரின் சேற்றைக் குறைக்கவும் தமிழன் கையாண்ட அற்புதமான யுக்தி ‘குமிழித் தூம்பு’.

www.grlvidya.in

- மழைக்காலங்களில் ஏரியில் நீர் நிரம்பும்போது நீந்துவதில் வல்லவரான ஒருவர் தண்ணீருக்குள் சென்று கழிமுகத்தை அடைந்து, குமிழித்தூம்பை மேலே தூக்குவார்.
- அடியில் இருக்கும் இரு துளைகளின் வழியே, மேலே இருக்கும் நீர் ஓடித் துளையிலிருந்து வெளியேறும்.
- கீழே உள்ள சேறும் சகதியும், துளையில் இருந்து நீருடன் சேர்ந்து வெளியேறும். தூர் வாரவேண்டிய அவசியம் இருக்காது.

## பகுதி-ஈ

IV.செயல்பாடுபடத்தைப் பார்த்துக் கவிதை படைக்க. பசுமை யான மரம்- ஒருவீடுமாணவக் கவிஞர்கள் தங்கள் மனதில் தோன்றும் எண்ணங்களைக் கவிதையாக வடிக்கவும்.

www.grlvidya.in